சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.6/2025.

இன்

அசல் வழக்கு எண்.101/2016

....

நாகராஜன் .. மனுதாரர்/வாதி

..எதிர்..

KN.கண்ணப்பசுப்பிரமணியன் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 04.11.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.சோமநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சி.ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

தாவா வழக்கையும் வாதுரைக்காக வரும் 04.01.2025-ல் ஏற்பட்டுள்ள வாய்தாவை மீண்டும் Re-Open செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

தாவா வழக்கையும் Exhibit A1- கிரைய உடன்படிக்கையின் அடிப்படையிலேயே தாவா சொத்தைப் பொறுத்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாவா வழக்கையும் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதார்/பிரதிவாதியும் Exhibit A1-யை தான் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதிலுள்ள கையெழுத்து

தன்னுடையது அல்ல என்றும் மறுப்பதால் Exhibit A1-யை எதிர்மனுதார்/பிரதிவாதி தான் எழுதிக் கொடுத்தார் என்பதை மனுதாரர் தரப்பு நிரூபிக்க வேண்டியுள்ளதால் தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள Exhibit A1-யையும் எதிர்மனுதார்/பிரதிவாதி ஒத்துக் கொண்ட கையெழுத்து உள்ள வக்காலத்து, சம்மன் மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள கையெழுத்தையும் ஒப்புகை செய்து Opinion பெறுவதற்கு இந்திய சாட்சிய சட்டம் 45 தற்பொழுது திருத்தச் சட்டம் பிரிவு 39 BSA-ன் படி கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப வேண்டி மனு தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் தாவா வழக்கில் இருதரப்பு விசாரணையும் முடிந்து வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள தாவா வழக்கை மீண்டும் Re-open செய்ய வேண்டியதாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

## 3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்

மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே நான்கு சாட்சிகளை விசாரித்துள்ளார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மட்டும் சாட்சியம் அளித்துள்ளார். தற்போது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் வேண்டுமென்றே உடல் நலம் பாதிக்கப்பட்ட எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிவு செய்யும் எண்ணத்துடன் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரரை அலைக்கழிவு செய்யும் எண்ணத்துடன் தாவா வழக்கை ஏற்கனவே கடந்த 8 வருட காலமாக நடத்தி வருகிறார்கள். தாவா மனுவிற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது. எனவே தாவா மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புக்கள் பார்வையிடப்பட்டன.

6. தாவா வழக்கையும் வாதுரைக்காக வரும் 04.01.2025-ல் ஏற்பட்டுள்ள வாய்தாவை மீண்டும் Re-Open செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வா.சா.ஆ.1 ஐ எதிர்மனுதாரர் ஒத்துக் கொண்ட கையெழுத்து உள்ள வக்காலத்து, சம்மன் மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள கையெழுத்தையும் ஒப்புகை செய்து Opinion பெறுவதற்கு கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப வேண்டி மனு தாக்கல் செய்ய இந்த மனுவை அனுமதிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபணை செய்து எதிர்மனுதாரர் தரப்பில் உடல் நலம் பாதிக்கப்பட்ட எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிவு செய்யும் எண்ணத்துடன் கடந்த 8 வருட காலமாக தாவா வழக்கை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

7) தாவா அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார்/பிரதிவாதி வா.சா.ஆ.1 ஐ தான் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் மறுப்பதால் வா.சா.ஆ.1 ஐ நிரூபிப்பதற்கு பிரதிவாதி ஒத்துக் கொண்ட வக்காலத்து, சம்மன் மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்களுடன் ஒப்பீடு செய்து நிரூபணம் செய்ய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு இந்த மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது. இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாக மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். தாவா வழக்கானது இருதரப்பு விசாரணை மற்றும் வாதுரைக்கு பின்பு தான் தீர்மானிக்க இயலும் என்பதால் நீதியின் நலன் கருதி தாவா மனுவினை அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.11.20 17:31:22 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.11.20 17:31:29 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

Subordinate Court
Sivagangai

I.A.No.6/2025,
in
O.S.No.101/2016
in
**Draft/Fair/Order**
20.11.2025.